செய்தி வெளியீடு : 281 26.6.2008

# இந்த ஆண்டின் புதிய திட்டம் தமிழ்வழி பயின்று பத்தாம் வகுப்புப் பொதுத் தேர்வு மதிப்பெண்களில் முதல் 1000 இடங்கள் பெற்ற 1100 மாணவ, மாணவியருக்கு ஊக்கப் பரிசாக மடிக்கணினிகள்! மாநில அளவில் முதல் மூன்று இடங்கள் பெற்ற 13 மாணவ மாணவியர்க்கு ரொக்கப் பரிசுகள்!

## முதலமைச்சர் கலைஞர் வழங்கிப் பாராட்டினார்!

தமிழ்வழிக் கல்வியில் பயின்று பத்தாம் வகுப்புப் பொதுத் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெறும் 1000 மாணவ, மாணவியருக்கு ஊக்கப் பரிசாகக் கணினிகள் அளிக்கப்படும் என இந்த ஆண்டின் நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டது. அதன்படி, 2008 மார்ச்சுத் திங்களில் நடைபெற்ற பத்தாம் வகுப்பு அரசுப் பொதுத் தேர்வில், தமிழ் வழி பயின்று அதிக மதிப்பெண்கள் எய்தியதில் முதல் 1000 இடங்களைப் பெற்ற 1100 மாணவ, மாணவியருக்கு 2 கோடியே 37 இலட்ச ரூபாய் செலவில் ஊக்கப் பரிசாக மடிக்கணினிகள் வழங்கும் திட்டம் இந்த ஆண்டின் ஒரு புதிய திட்டமாகச் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தை, முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தலைமைச் செயலகத்தில் இன்று (26.6.2008) தொடங்கி வைத்து, சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் ஆகிய மாவட்டங்களைச் சார்ந்த 10 மாணவ, மாணவியருக்கு மடிக்கணினிகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியை அடுத்து, தமிழகத்தில் உள்ள பள்ளிகளில் தமிழை ஒரு பாடமாக எடுத்துப் படித்து, 10–ஆம் வகுப்புப் பொதுத் தேர்வில் அதிக மதிப்பெண்கள் குவித்து மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் முதல் மூன்று இடங்களைப் பெற்றுச் சாதனைகள் படைக்கும் மாணவ, மாணவியரின் உயர்கல்விச் செலவினங்களைத் தமிழக அரசு ஏற்குமென 1996–ஆம் ஆண்டில் முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அறிமுகம் செய்த திட்டத்தின்கீழ், 2008 மார்ச்சுத் திங்களில் நடைபெற்ற 10ஆம் வகுப்புப் பொதுத் தேர்வில்,

500க்கு 496 மதிப்பெண்கள் ஈட்டி மாநில அளவில் முதல் இடம் பெற்றுள்ள திருநெல்வேலி மாவட்டம் பாளையங்கோட்டை செயின்ட் இக்னீசியஸ் பெண்கள் மேல்நிலைப் பள்ளியைச் சேர்ந்த ஆர். ராம் அம்பிகை என்ற மாணவிக்கு 7,500/– ரூபாய்;

500க்கு 494 மதிப்பெண்கள் ஈட்டி மாநில அளவில் இரண்டாம் இடம் பெற்றுள்ள திருநெல்வேலி மாவட்டம் வீரவநல்லூர் செயின்ட் ஜான்ஸ் மேல்நிலைப் பள்ளி மாணவன் எம். ஜோசப் ஸ்டாலின்; திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை சாராடக்கர் பெண்கள் மேல்நிலைப் பள்ளி மாணவி எஸ். ஜகீனா, பெரம்பலூர் மாவட்டம், பெரம்பலூர் தந்தை ஹேன்ஸ்ரோவர் மேல்நிலைப் பள்ளி மாணவன் பி. மருதபாண்டியன், சென்னை சாந்தோம்

**செயின்ட் ரபேல்ஸ் பெண்கள் மேல்நிலைப் பள்ளி மாணவி எஸ்.சுவேதா ஆகிய நான்கு பேருக்கும் தலா 6000/– ரூபாய்;**

**500க்கு 493 மதிப்பெண்கள் ஈட்டி மாநில அளவில் மூன்றாம் இடம் பெற்றுள்ள திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை செயின்ட் இக்னீசியஸ் மேல்நிலைப் பள்ளி மாணவி என். ரமாசுவாதிகா, மதுரை மாவட்டம், சௌராஷ்டிரா பெண்கள் மேல்நிலைப் பள்ளி மாணவி ஜி.கே. உமாபிரியா, சேலம் மாவட்டம் செயின்ட் மேரீஸ் பெண்கள் மேல்நிலைப் பள்ளி மாணவி கே. இந்து, கரூர் மாவட்டம் புலியூர் சி.எப். ராணி மெய்யம்மை மேல்நிலைப் பள்ளி மாணவன் எஸ். செல்வராஜ், திருச்சி மாவட்டம் அமலா பெண்கள் மேல்நிலைப் பள்ளி மாணவி ஜி.காயத்திரி, தஞ்சாவூர் மாவட்டம், தாமரன்கோட்டை அரசு மேல்நிலைப் பள்ளி மாணவி எம். ரிஃபாயா பேகம், விழுப்புரம் மாவட்டம், கள்ளக்குறிச்சி ஏ.கே.டி. நினைவு உயர்நிலைப் பள்ளி மாணவன் எம். திருமால், காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு செயின்ட் மேரீஸ் பெண்கள் மேல்நிலைப் பள்ளி மாணவி வி.எமிலின் மெர்சி ஆகிய எட்டு பேருக்கு தலா 5000/– ரூபாய்**

**–என மொத்தம் 13 மாணவ, மாணவியருக்கு 71 ஆயிரத்து 500 ரூபாய்க்கான காசோலைகளை மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் வழங்கிப் பாராட்டியதுடன், பரிசு பெற்ற மாணவ, மாணவியரின் உயர்கல்விச் செலவு முழுவதையும் தமிழக அரசே ஏற்கும் என்பதற்கான சான்றிதழ்களையும் அவர்களிடம் வழங்கி வாழ்த்துகள் தெரிவித்தார்.**

**முதலமைச்சர் கலைஞர் அவர்களிடமிருந்து மடிக்கணினிகளையும், காசோலைகளையும் பரிசுகளாகப் பெற்ற மாணவ மாணவியரும், அவர்களுடைய பெற்றோரும் இந்த மகத்தான திட்டங்கள் தமிழக பள்ளி மாணவ, மாணவியர் இடையே நன்றாகப் படித்து மாநில அளவில் சாதனைகள் படைத்திட ஊக்கமளிப்பதாகவும், இத்தகைய திட்டங்களை அறிமுகப்படுத்தி, தமிழகத்தின் தரமான கல்வி வளர்ச்சிக்கு வழிவகுத்துவரும் முதலமைச்சர் கலைஞர் அவர்களுக்கு நன்றி கூறிப் பாராட்டுவதாகவும் தெரிவித்தனர்.**

**இந்நிகழ்வின்போது, பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு, தலைமைச் செயலாளர் திரு. எல்.கே. திரிபாதி, இ.ஆ.ப., பள்ளிக்கல்வித் துறைச் செயலாளர் திரு. எம். குற்றாலிங்கம், இ.ஆ.ப., பள்ளிக்கல்வி இயக்குநர் முனைவர் பெருமாள்சாமி, அரசுத் தேர்வுகள் இயக்குநர் திருமதி வசந்தி ஜீவானந்தம் ஆகியோர் உடனிருந்தனர்.**

* * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.